15

அனுப்புநர்
உறுப்பினர்–செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
1, காந்தி–இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

பெறுநர்
முதன்மை தலைமை பொறியாளர்
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை
சென்னை – 600 003

---

கடித எண்.: பி2/8537/2017

தேதி: 23.2.2018

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – ஊக்கத்தளப்பரப்புடன் கூடிய திட்ட அனுமதி – நில அளவை எண்.3847/92 மற்றும் 3847/93, (பட்டாவின்படி), பகுதி எண்.76, மைலாப்பூர் கிராமம், மனை எண்.10A & 10B, பழைய கதவு எண்.2, புதிய கதவு எண்.5, செனடாப் சாலை இரண்டாவது சந்து, தேனாம்பேட்டை, சென்னை–18ல் அடித்தளம் (பகுதி) + வாகன நிறுத்து தளம் + நான்கு தளங்களுடன் 4 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புக் கட்டிடம் – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்பு கட்டிடப் பிரிவு எண்.BS2/2017/000377 நாள் 12.6.2017அன்று கிடைக்கப் பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண். 163, வீ.வ.மற்றும் ந.வ.துறை, ந.வ.(ந.வ.4(1) துறை நாள் 9.9.2009.
3. அரசாணை (பல்வகை) எண்.86, ந.வ.துறை, ந.வ.(ந.வ.4(1) துறை நாள் 28.3.2012
4. அரசாணை (பல்வகை) எண். 303, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 30.12.2013 (த.நா.அ. அறிக்கை வெளியீட்டு நாள் 29.01.2014).
5. அரசாணை (பல்வகை) எண்.85, வீ.வ,மற்றும் ந.வ.துறை நாள் 16.5.2017.
6. தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை கடித எண்.6188/UD-4(3)/2017-8 நாள் 13.6.2017.
7. ஏற்கனவே திட்ட அனுமதி ஒப்பளிக்கப்பட்ட இவ்வலுவலக கடித எண்.பி1/5849/2016 நாள் 3.3.2017.
8. வழிகாட்டு மதிப்பீடு கோருதல் குறித்து சார்பதிவாளர், மைலாப்பூர் அவர்களுக்கு இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 13.12.2017,
9. Joint-I சார்பதிவாளர், DRC மத்திய சென்னை, சென்னை அவர்களின் கடித எண்.303/2017 நாள் 21.12.2017.
10. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 25.1.2018.
11. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 15.2.2018.

*******

நில அளவை எண்.3847/92 மற்றும் 3847/93, (பட்டாவின்படி), பகுதி எண்.76, மைலாப்பூர் கிராமம், மனை எண்.10A & 10B, பழைய கதவு எண்.2, புதிய கதவு எண்.5, செனடாப் சாலை இரண்டாவது சந்து, தேனாம்பேட்டை, சென்னை–18ல் அடித்தளம் (பகுதி) + வாகன நிறுத்து தளம் + நான்கு தளங்களுடன் 4 குடியிருப்புகள் கொண்ட குடியுருப்பு உபயோகம் மற்றும் ஊக்கத்தளப்பரப்புடன் கொண்ட கட்டிடத்தை கட்டுவதற்கு, பார்வை–1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை–10ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

For Gee Gee Hire Purchase & Leasing (P) Ltd.,

Managing Director / Director.

NOTARY PUBLIC R. KRISHNAMURTHY CHENNAI CITY G.O.

Scanned by CamScanner

2. இந்த திட்ட அனுமதியானது பார்வை–7இல் வழி வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கான திருத்திய திட்ட அனுமதியாகும். எனவே, பார்வை–7இல் வழி வழங்கப்பட்ட திட்ட அனுமதி இதனால் ரத்து செய்யப்படுகிறது. பார்வை–10இல் வழி வழங்கப்பட்ட திட்ட அனுமதியின் போது கீழ்கண்ட கட்டணங்கள் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டு இத்திட்டத்தில் ஈடு செய்யப்பட்டது.

| விவரங்கள் | ஏற்கனவே பி1/5849/2016 என்ற கோப்பில் 10.2.2017 நாள் கடிதத்தின் படி கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார் | மீதமுள்ள கட்டணங்களை இதே எண் கொண்ட கோப்பில் 25.1.2018 நாள் கடிதத்தின் படி கீழ்கண்ட கட்டணங்களை செலுத்தியுள்ளார் |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ.15,550/– ரசீது எண். B003601 நாள் 16.2.2017 | இல்லை |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ.420/– ரசீது எண்.B003601 நாள் 16.2.2017 | ரூ.800/– ரசீது எண்.B006647 நாள்13.2.2018. |
| வரன்முறைக் கட்டணம் | ரூ.43,890/– ரசீது எண்.B003601 நாள் 16.2.2017 | இல்லை |
| திறந்தவெளிக் கட்டணம் | இல்லை | இல்லை |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம்: | ரூ.2,64,000/– ரசீது எண்.B003601 நாள் 16.2.2017 | ரூ.8,000/– ரசீது எண்.B006647 நாள்13.2.2018. |
| குழிவுநீர் தொட்டிற்கான காப்புறுதி கட்டணம் | இல்லை | இல்லை |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ.10,000/– ரசீது எண்.B003601 நாள் 16.2.2017 | இல்லை |
| உள்கட்டமைப்பு வசதி கட்டணம் | ரூ.3,36,960 ரசீது எண் B003601 நாள் 16.2.2017 | இல்லை |
| ஊக்கத் தளப்பரப்பு கட்டணம் | ரூ.20,86,640 ரசீது எண்.B003601 நாள் 16.2.2017 | இல்லை |

3. (அ) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான கட்டணமாக ரூ.22,600/– (ரூபாய் இருபத்தி இரண்டாயிரத்து அறுநூற்று மட்டும்) ரசீது எண் B006647 நாள்13.2.2018ல் செலுத்தியுள்ளார்.

(ஆ) கழிவு நீரகற்று அமைப்பைப் பொருத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியத்திடம் முறையான விண்ணப்பத்தை நேரடியாக சமர்ப்பித்து உரிய அனுமதியை பெற்ற பின்தான், வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

(இ) குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியம் குடிக்கவும் சமையலுக்காகவும் மட்டும் நீர் வழங்க இயலும். வழங்கப்படும் நீரின் அளவும் ஒரு குடியிருப்பிற்கு அதிகபட்சமாக 5 பேருக்கும் ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவிற்குமே இருக்கும். வேறு உபயோகங்களுக்குத் தேவையான நீருக்காக கட்டிடம் கட்டுபவரே வேறு ஏற்பாடுகளை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெற்ற பிறகு, குடிநீர் இணைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும். அனைத்து கிணறுகளும், மேல் நிலைத்தொட்டிகளும் கழிவு நீர்த் தொட்டிகளும். கொசுத் தொல்லைகள் இல்லாவண்ணம் சுகாதார முறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

4. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழை நீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரை படத்திலிருந்தும், வளர்ச்சி விதிமுறைகள் விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும். அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

For Gee Gee Hire Purchase &
Leasing (P) Ltd.,

Managing Director / Director.

Scanned by CamScanner

5. எண்.பி/சிறப்புக் கட்டிடம்/32/2018 நாள் 23.2.2018 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 23.2.2018 இருந்து 22.2.2023 வரை செல்லுபடியாகும் (Permit No.11841).

6. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு. விண்ணப்பதாரர் பெருநகர சென்னை மாநகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

7. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது பெருநகர சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919. தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள். தமிழ்நாடு ஊராட்சி விதிகள். இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம் வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருதியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

8. செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு. விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையத்தில் குத்தகை பத்திரம், பட்டா. தானப்பத்திரம். பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும். விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

9. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும். அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும். அவ்வாறில்லாமல். ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10. **"As approved by Tamil Nadu Govt. in G.O.Ms.No.112, H&UD Dept. dated 22.6.2017, to carry out the provisions of Real Estate (Regulation and Development) Act 2016, the Promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it, only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority".**

For Gee Gee Hire Purchase & Leasing (P) Ltd.,

Managing Director / Director.

NOTARY PUBLIC * GOVT. OF TAMIL NADU * R. KRISHNAMURTHY CHENNAI CITY

Scanned by CamScanner

18

<u>பி2/8537/2017</u>

"தமிழ்நாடு அரசு, அரசாணை எண் G.O.Ms.No.112, H&UD Dept. நாள் 22.6.2017–ல் கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) விதிகள் 2017–க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி மனை/கட்டிடம் விற்பவர் உத்தேசிக்கப்படவிருக்கும் மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டிற்கு விளம்பரம் செய்யவோ விற்பனை செய்யவோ முன்பதிவு செய்யவோ, விற்கவோ (அ) விலை அறிவிப்பு செய்யவோ மனை, கட்டிடம் (அ) அபார்ட்மெண்ட்டுகளை வாங்குபவர்களுக்கு அழைப்பு விடுக்கவோ எதுவாக இருந்தாலும், அக்கட்டிட, மனை விற்பனை திட்டத்தை தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்த பிறகே, செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இந்த திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது."

தங்கள் உண்மையுள்ள,

27/02/2018

உறுப்பினர்–செயலருக்காக.

27/2/18

இணைப்பு:

1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்:

1. திருவாளர்கள் ஜி.ஜி.ஹையர் பர்ச்சேஸ் லீசிங் பிரைவேட் லிமிடேட்
   திருவாளர்கள் நிதிலா மாசிலாமணி மற்றும் 3 நபர்கள் பொது அதிகாரம் பெற்றவர்
   எண்.2, 8வது தளம், மெக்நிக்கல்ஸ் சாலை
   சேத்துப்பட்டு
   சென்னை– 600 031

2. உறுப்பினர்
   உரியதுறை (Appropriate Authority)
   108, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034

3. வருமானவரி ஆணையர்
   168, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034

4. துணைதிட்ட அமைப்பாளர்
   செயலாக்கப்பிரிவு (தெற்கு), செ.பெ.வ.குழுமம், சென்னை– 600 008

5. மேலாண்மை இயக்குநர்
   செ.பெ.குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம், சென்னை – 600 002

NOTARY PUBLIC * GOVT. OF TAMIL NADU *

For Gee Gee Hire Purchase & Leasing (P) Ltd.,

Managing Director / Director.

Scanned by CamScanner

Chennai Metropolitan Development Authority
PLANNING PERMIT
(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 11941

B/SPL-BLDG/32/2018

Date of Permit 23.2.2018

Premium FSI

File No. B2/8537/2017

Name of Applicant with Address M/s. GEE GEE HIRE PURCHASE LEASING (PVT) LTD - GPA for Nithila Masilamani & 3 others
No 2, 8th Floor
Mc. Nicholas Road
Chetpet, Chennai-31

Date of Application 12-6-2017

Nature of Development : ~~Layout/Sub-division of Land~~/Building construction/~~Change in use of Land~~/Building

Proposed construction of BF(part) + Stilt Floor

Site Address + 4 Floors Residential building with 4 D/U ~~with PV~~ at plot No 10A & 10B, old

Division No. Door No 2, New Door No 5, Centaph Road 2nd Lane, Teynampet, Chennai-18, comprised in R.S.No 3847/92, 3847/93, Block No 76 (As per PLR) of Mylapore Village, within Greater Chennai Corporation limit.

Development Charge paid Rs. 15550 Challan No B05601 Date 16.2.2017
Remitted in the earlier Approval File No B1/5849/16

PERMISSION is granted to the ~~layout/sub-division of land~~/building construction/~~change in use of land~~/building according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 22.2.2023 the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

For MEMBER SECRETARY

NOTARY PUBLIC * GOVT. OF TAMIL NADU

For Gee Gee Hire Purchase & Leasing (P) Ltd.,

Managing Director / Director.

Scanned by CamScanner

25

பெருநகர சென்னை மாநகராட்சி

**Greater Chennai Corporation**

நகரமைப்பு பிரிவு - பணித்துறை

Town Planning Section-Works Department

**REVISED PLAN**

## Building Permission

(1919 ஆம்ஆண்டின் சென்னை மாநகராட்சி சட்டம் 238 வது பிரிவின் படி)

(1919 MCMC Act Section 238)

| | | | |
|---|---|---|---|
| கட்டட அனுமதி எண்/ Building Plan No | | திட்ட அனுமதி எண்/Plan Submission No | |
| CEBA/WDCN09/00112/2018 | | B2/8537/2017 - 23/02/2018 | |
| மண்டலம் / Zone | கோட்டம் / Ward | அனுமதி நாள் / Approval Date | மனுபெறப்பட்ட நாள்/ Application Date |
| N09 | N122 | 20/04/2018 | 20/04/2018 |
| மனுதாரரின் பெயர் மற்றும் குடியிருப்பு முகவரி / Applicant name & address | | Ms. GEE GEE HIRE PURCHASE AND LEASING PVT LTD GPA FOR NITHILA MASILAMANI-AND NITHYANAND SAMUEL MASILAMANI No.2, 8TH FLOOR, Mc.NICHOLES ROAD, CHETPET, CHENNAI-600031 | |
| சேவைபாட்டு தன்மை / Service Type | | CMDA Proposal- only for Building Permit | |
| மனை அமைவிடம் / Plot address | | Door No:OLD No.2, NEW No.5,Block No:76,Plot No:10A & 10B, Survey No:R.S.NO.3847/92, 3847/93, Cenatoph 2nd Lane,Teynampet,Teynampet,Mylapore, CHENNAI, 600018 | |
| | | | 10400 |
| Building License Fees | | | 1000 |
| Regularisation Charges (penalty under section 244A) | | | 1000 |
| Road cut charges - CMWSSB SEWERAGE | | | 1000 |
| Road cut charges - CMWSSB WATER | | | 1000 |
| Road cut charges - TNEB | | | 600 |
| Scrutiny Fees | | | 15000 |
| மொத்தக் கட்டணம்/ Total (In Rs.) | | | |

Revised copy

Amount (in words): Rupees Fifteen Thousands Only

M.W.G.W.F. DD Details : DD Number: 085595 Amount: 10000 Rs. Date:17/04/2018 Bank:HDFC BANK

பின் குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கு ஒப்பளிக்கப்பட்ட வரைபட நகலின்படி அனுமதி

**Sanctioned for CMDA Proposal- only for Building Permit** Subject to Terms and Condition on Rear Side and as per Sanctioned plan copy.

இந்த அனுமதி முடிவு நாள் 19/10/2018 ஆம் தேதிக்குள் வேலை தொடங்காவிட்டால் காலாவதியாகிவிடும் தொடங்கப்பட்டிருந்தால் கட்டிட அனுமதி 19/04/2020

This Sanction will expire if the construction is not started with in 19/10/2018

If Construction started Building Permit is valid up to 19/04/2020

20/04/18

Assistant Executive Engineer (T.P.)

4/16

Executive Engineer (T.P.)

For Gee Gee Hire Purchase & Leasing (P) Ltd.,

*Managing Director / Director.*

20/4/18

20/04/18 Supdt

Scanned by CamScanner